# அரசியல் கற்கைகளில் நடத்தைவாதம்: ஓர் அரசியல் மெய்யியல் நோக்கு

எம் .எல். இஸ்ஸத்தீன்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

ஒரு தனிப்பட்ட நபர் சமூகத்துடன் கூட்டுறவாக இருப்பதற்கு அவன் என்ன செய்ய வேண்டும்? என்ற கேள்வியுடன் ஆரம்பிக்கின்ற அரசியல் மெய்யியல், சமூக செயற்களம் குறித்த ஒழுக்கவியல் நோக்குடனான பொருத்ததப்பாடுகள் பற்றி ஆராய்வதுடன் மக்கள் வாழ்கின்ற, செயற்படுகின்ற சமூக இருப்புக்கள் பற்றியும் பலவகை அரச வடிவங்கள், அரசுடன் தொடர்பான எண்ணக்கருக்கள் பற்றியும் கருத்துரைக்கிறது. இது ஒரு நெறிமுறையை வகுத்து வழங்குவதன் மூலம் இருக்கின்ற நிறுவனங்களை, அதன் உறவுகளை நியாயிக்கவும் பகுப்பாய்வு செய்யவும் முயற்சிக்கிறது.

அரசியல் மெய்யியல், அரசியல் விஞ்ஞானம் என்பன அவை கையாழுகின்ற பிரச்சினைகளின் பரப்பெல்லைகளாலும் முறைகளாலும் மிக நெருக்கமாக தொடர்புபட்டிருந்தாலும் அவை இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்கவும் முடியும். முக்கியமாக அரசியல் விஞ்ஞானமானது நடைமுறை அரச விவகாரங்களுடன் தொடர்புபட்டிருப்பதுடன் அதன் விபரிப்புக்களில் ஒழுக்கம்சார் விடயங்கள் அடங்கியிருப்பதில்லை. அது அரசியல் யாப்புசார் பிரச்சினைகள், வாக்களித்தல் தொடர்பான மனித நடத்தை, அதிகாரச் சமநிலை, நீதிசார் மறுசீராய்வின் தாக்கம் இவை போன்ற அரசியல் விவகாரங்களை ஒரு நேர்முறைப் பகுப்பாய்வின் மூலம் ஆராய்கிறது.

19ஆம் நூற்றாண்டில் உளவியலில் நடத்தைவாதத்தின் தோற்றத்தோடு அரசியலை பிறிதொரு கோணத்தில் பார்க்கும் முயற்சி ஏற்பட்டது. அதாவது அரசியல் பாடப்பரப்பில் மனிதனது அரசியல்சார் நடத்தையை தொடர்புபடுத்தி பார்க்கும் தன்மை எழுச்சி அடையத் தொடங்கியது. இது முதன் முதலில் Alex De Tocquevilleனால் எழுப்பப்பட்ட எவ்வாறு மனிதன் அரசியலில் நடந்து கொள்கிறான்? என்ற கேள்வியோடு தொடங்கியது. அந்தவகையில் அரசியல் விஞ்ஞான மயப்பட்டதாக அமைவதற்கு நடத்தைவாதத்தின் தோற்றம் மிக முக்கியமானதாகும். எனினும் 1950களின் பின்னர் இந்த அணுகுமுறையில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொண்டு பின்நடத்தைவாதத்தின் பணிகள் தொடர்ந்தன. இவ்வாறான முயற்சிகள் அரசியலை இன்னும் முறையான கற்கையாக மாற்றியது. இருப்பினும் அரசியலில் உள்ளவற்றை பகுப்பாய்வு செய்வதிலும், நியாயித்து நிருபிப்பதிலும், எதிர்வு கூறுவதிலும் அரசியலில் உள்ளவைகளின் தன்மைகள் தாக்கம் செலுத்துவதை யாராலும் நிராகரித்துவிட முடியாது. குறிப்பாக அதன் ஆய்வெல்லைகள் சமூகத்தை நோக்கியதாக, அதன் பண்பியல்சார் விடயங்களாக அமைந்திருப்பது இங்கு கருதத்தக்கது. பொதுவாக சமூக விடயங்களில் நடைமுறையிலுள்ள விஞ்ஞான முறையியல்களின் ஏற்புடைமை பற்றிய வாதப்பிரதி வாதங்கள் துறைசார் அறிஞர்களால் முன்வைக்கப் பட்டிருக்கின்றன. இங்கு சமூக விடயங்களைப் புறவயப்படுத்திப் பார்ப்பதிலுள்ள பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளத்தக்கவைகளாகும்.

அரசியல் அறிஞர்களினதும், ஆய்வுகளினதும் இறுதி நோக்கம் சமூகத்தில் காணப்படுகின்ற மனிதர்களின் சிறப்பு இருத்தல் பற்றியதாகும். இந்நோக்கை அடைவது பற்றி அரசியல் மெய்யியல் நேரடியாகப் பேசுகிறது. ஆனால் நடத்தைவாதம் விஞ்ஞான முறையியயல்சார் ஆய்வுகளுடாக சமூகத்தின் உண்மையான நிலையினை அனுபவரீதியாக அடையாளம் கண்டு முடிவு பெறலாம் என்பது பற்றிப் பேசுகிறது.

நடத்தைவாதிகள் அரசியலில் சில குறிப்பிட்ட அம்சங்கள் மீது மட்டும் ஆர்வம் காட்டினரே அன்றி அரசியலின் அடிப்படையான மரபுரீதியான அம்சங்களை கவனிக்கத் தவறி விட்டனர் என விமர்சிக்கப்படுவதுடன் அவர்கள் முறைமை நுட்பங்களுக்கு கொடுத்த முக்கியத்துவத்தினை நடத்தையின் விளைவுகளுக்கு கொடுக்கவில்லை எனவும் அதனால் அவை போலியான பகுப்பாய்வுகளாக அமைந்தது எனவும் விமர்சிக்கப்பட்டனர்

## நடத்தைவாதம்

அரசியல் விஞ்ஞானத்தில் நடத்தைவாதம் என்பது 1950, 60 களில் ஆதிக்கம் பெற்றதோர் அணுகுமுறையாக காணப்பட்டது. அரசியல் விஞ்ஞானத்தினுடைய விடயதானம் சுதந்திரமாக அவதானத்திற்கு உட்படக் கூடியதும் அளவிடலுக்கு உட்படக்

கூடியதுமாக இருக்கின்ற தோற்றப் பாடுகளுக்கு எல்லைப்படுத்தப்பட வேண்டும் என்பதில் இவர்கள் அக்கறை கொண்டிருந்தார்கள். அரசியல் நிறுவனங்கள் அடிப்படை சமூக சக்திகளை பரந்த அளவில் பிரதிபலிப்பதுடன் அரசியல் ஆய்வு சமூகம், கலாசாரம் மற்றும் பொதுசன அபிப்பிராயம் போன்றவற்றோடு ஆரம்பிக்கப்பட வேண்டும் எனக் கருதினர். நடத்தைவாதிகள் சாரா மாறிகளுக்கும் சார்பு மாறிகளுக்கும் இடையிலான புள்ளிவிபர உறவு முறைகளை விருத்தி செய்கிற சமூக விஞ்ஞான ஆய்வு முறையியலை பயன்படுத்தினர்.

இரண்டாம் உலக மாகா யுத்தத்தின் பின்னரான காலப்பகுதியில் ஆதிக்கம் பெற்றவர்களாகக் காணப்பட்ட நடத்தைவாதிகள் அரசியலை எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு விஞ்ஞானத்தன்மை கொண்ட ஆய்வாக மாற்றுவதற்கு உதவினார்கள். பாரம்பரிய சிந்தனையாளர்கள் என அழைக்கப்படுகின்றவர்கள் அளவீடுசாரா விபரிப்புக்கள், செய்தித் துணுக்குகள், வரலாற்று ஒப்புவமைகள், கருத்தாக்கங்கள், மெய்யியல் போன்றவற்றைப் பயன்படுத்தி அரசியலை விளக்குவதற்கு முயன்றனர். மாறாக, நடத்தைவாதிகள் பலர் அரசியல் விஞ்ஞானத்தில் அளவுசார் கணிப்பீட்டு முறையைப் பயன்படுத்த முடியும் என வாதிட்டனர். உளவியலில் நடந்தது போன்று அரசியல் விஞ்ஞானத்திலும் ஆய்வுக்கான உள்ளுணர்வு முறையை நீக்கிவிட்டு குறைந்தது அனுபவம்சார் அவதான முறையைக் கையாள்வதற்கு முயற்சி செய்தனர்.

1900இல் அமெரிக்க அரசியல் விஞ்ஞானியும் மெய்யிலாளருமான Arthur F. Bentley யுடன் அரசியல் விஞ்ஞானம் அரசியல் விஞ்ஞானத்திற்கான அடித்தளத்தினையும் அடையாளத்தினையும் பெற்றுக் கொண்டது. நடத்தைவாத ஆய்வு முறையியல் ஒன்றின் விருத்திக்கான இவருடைய பங்களிப்பு அளப்பெரியதாகும். Arthur F. Bentley சமூகத்தின் பெறுமானம்சார் விடயங்கள் கடந்த ஓர் முறையை அரசியலில் உட்புகுத்தினார். Bentley சமூக விஞ்ஞானம் பரிசோதனை, அளவீடு, செயற்பாடு என்பவற்றினை முறையான சமூக, அரசியல், பொருளாதார நிலைகளின் பக்கமான ஆய்வாக அறிமுகப்படுத்தினார். 1951 இல் David Truman வெளியிட்ட அரசாங்கத்தின் செயற்பாடு (Governmental Process) என்ற நூல் அமெரிக்க அரசியலில் நலக் குழுக்களின் பங்கினை அதிகரிக்கத் தூண்டியது என Bentley குறிப்பிடுகிறார். இவருடைய பகுப்பாய்வுத் திறன் நடத்தைவாத இயக்கத்தை வலுப்படுத்தியதுடன் அரசியல் பாடப்பரப்பிற்கும் வலுச்சேர்த்தது. இது அரசியல் விஞ்ஞான உள்ளடக்கத்தில் பல்வேறு மாற்றத்தினையும் ஏற்படுத்தியது.

Albert Somit, & Joseph Tanenhaus ஆகியோர் நடத்தைவாதத்தில் பல்வேறு நியமங்களை உட்புகுத்தினர் அவற்றை பின்வருமாறு பார்க்கலாம்.

1. அரசியல் விஞ்ஞானமானது அரசியல் நடத்தை பற்றிய விளக்கத்தினையும், எதிர்வுகூறல்களையும் பெறுவதற்குரியதாக அமைதல் வேண்டும்.

2. அரசியல் விஞ்ஞானம் தனிப்பட்டவர்களினதும் அரசியல் குழுக்களினதும் நடத்தை பற்றிய அனுபவம்சார் அரசியலில் கவனம் செலுத்த வேண்டும்.

3. தரவுகள் எதிர்வு கூறலாக சொல்லக்கூடிய அளவு சார்ந்தவைகளாக காணப்பட வேண்டும்.

4. ஆய்வானது பரீட்சிக்கக் கூடிய கருதுகோள்களை கொண்டதாகவும், கோட்பாடுடையதாகவும் காணப்படல் வேண்டும்.

5. ஜனநாயகம், சமத்துவம், சுதந்திரம் போன்ற கருத்தாக்கங்கள் விஞ்ஞான ரீதியாக உருவாக்கப்பட்டவை அல்ல. அதனால் அவை தவிர்க்கப்பட வேண்டும் அல்லது பரீட்சிக்கப்படகூடியவைகளாக மாற்றப்பட வேண்டும்.

6. அரசியல் விஞ்ஞானம் மனித நடத்தை பற்றிய துறையாக்கப்பட வேண்டும்.

7. அரசியல் விஞ்ஞான முறையியல் பல்தகவுப் பகுப்பாய்வு, மாதிரி அளவை, கணிதமுறை என்பனவற்றை கொண்டதாக அமைய வேண்டும்.

இவற்றைப் பார்க்கின்றபோது அரசியல் விஞ்ஞானத்தின் மரபுரீதியான அணுகு முறைகளுக்கு மாற்றமாக புறவய விஞ்ஞான அணுகுமுறையைக் கைக்கொள்வதற்கான தீவிர அக்கறையை வெளிப்படுத்துகிறது. அவதானம், சோதனை, அளவிடல் என்பவைகளுக்கு ஊடான அரசியல்சார் மனித

நடத்தை பற்றிய இவர்களுடைய ஆய்விற்கான அக்கறை அதனை ஒரு புறவய விஞ்ஞான நிலையினை ஒத்த வகையில் மாற்றுவதற்கான அவாவாகக் காணப்படுகின்றது. அரசியல் நடப்புக்களில் தனிப்பட்டவர்களது நடத்தையின் முக்கியத்துவத்தினை நடத்தைவாதம் வெளிக் கொண்டு வந்திருக்கிறது. மேலும் அரசியலின் எல்லா நடப்புக்களிலும் நடைமுறையில் என்ன நடக்கின்றது என்பதில் அது கவனம் செலுத்துவதும் முக்கியமானதாகும்.

குறிப்பிட்ட நிலைமைகளில் குறிப்பாக தனிப்பட்டவர்களின் நடத்தை ஈடுபாடு எவ்வாறு இருக்கின்றது என்பதனை நடத்தைவாதம் ஆய்வுக்குட்படுத்துவதுடன் அரசியல் விஞ்ஞானத்தில் புதிய ஒழுங்கு விதிகளையும் நுட்பங்களையும் வெளிக்கொண்டு வருகின்றது. மேலும் தனிப்பட்டவர்களின் பிரச்சினைகளை விஞ்ஞான ரீதியில் தீர்த்து வைக்க கூடிய புதிய வழிவகையை அறிமுகம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நடத்தைவாதத்தின் இயல்பினை நாம் கருதும்போது, அவை எந்தெந்த விடயங்களை உள்ளடக்க வேண்டும் என்ற விடயத்தில் ஓர் உடன்பாடு காணப்படவில்லையாயினும் ஓரளவு அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பண்புகளை பின்வருமாறு காணலாம்.

- மறுப்பு இயக்கம் (Movement of protest), அதாவது மரபு ரீதியான அரசியல் கோட்பாடுகளுக்கு எதிரான நிலைப்பாடாக நடத்தைவாதம் காணப்படுகிறது. இது ஓர் ஒழுங்குட்பட்ட விஞ்ஞான முறையிலான கோட்பாட்டாக்கத்தினையும் அனுபவம்சார் அரசியலையும் உருவாக்குவதனை இலக்காகக் கொண்டது.

- நடத்தையை மையபபடுத்திய பார்வை(Focus on behavior): இது தனிப்பட்டவர்களின் நடத்தையை மையப்படுத்தியது. ஒவ்வொரு தனிப்பட்ட நபர்களினதும் நடத்தை வேறுபாடுகளைக் கொண்டதாயினும் அவற்றுக்கிடையில் சில ஒருமைப்பாடுகளும் உண்டு என நடத்தை வாதிகள் நம்புகின்றனர். இது மதிப்பீடு சார் கருத்தாக உள்ளது.

- முறையியல் புரட்சி (Methodozroal Revolution):இது இயற்கை விஞ்ஞானம், கணிதம், புள்ளிவிபரவியல், பௌதீகவியல், உயிரியல், போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட நுட்பங்களான அவதானம், நேர்காணல், அளவியல் ஆய்வு, கள ஆய்வு, தகவல் சேகரிப்பு, புள்ளிவிபர பகுப்பாய்வு போன்ற முறைகளை அரசியல் ஆய்வில் உட்படுத்த வந்தது எனலாம். இதற்கமையவே Easton என்பவர் அரசியல் முறைமை (Political System Modal) ஒன்றினை அறிமுகப்படுத்தினார்.

- பல்துறை கற்கை நெறிகளை உள்ளடக்கியது (Interdisciplinary Study): தனிப்பட்டவர்களின் நடத்தை முழுச் சமூகத்தின் ஒரு பகுதியாகும் என்ற அடிப்படையில் அதனை புரிந்து கொள்ள அரசியல் ஆய்வாளர்கள் சமூகவியல், உளவியல், கலாசாரம் என்பவற்றுடன் நின்று விடாது அந்த நடத்தையுடன் தொடர்புடைய ஏனைய சூழலையும் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே அதற்கான தரவுகளை வேண்டி வரலாறு, மானுடவியல், பொருளாதாரம் போன்றவற்றுடன் இணைந்த பல்வேறு கற்கைகளைக் கொண்டதொரு துறையாக அரசியல் மாற்றப்பட வேண்டும்.

- கோட்பாடு உருவாக்கம் (Theory making): நடத்தைவாதம் அரசியல் நடத்தையை மட்டும் பகுப்பாய்வு செய்யாமல் ஓர் விஞ்ஞான ரீதியான கோட்பாட்டை உருவாக்க எத்தனிக்கின்றது. அது அனுபவம், அவதானம் என்பவற்றின் மூலம் உருவாக்கப் படுவதுடன் அதனை சர்வதேச ரீயிதில் பிரயோக்கிக்க தக்கதாக அமைவதனை நோக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றது.

எனவே நடத்தைவாத்தின் பண்புகளை நாம் பார்க்கும் போது, அவை அரசியலை ஒரு விஞ்ஞானத்தின் விடையத்திற்கு இட்டுச் செல்லும் வழி முறைகளை தெளிவாக முன் வைத்துள்ளது எனலாம். இவர்களுடைய கருத்தில் நடத்தைவாதம் என்பது சமூக விஞ்ஞானத்துடன் இணைந்த, தூய விஞ்ஞானத்தின் அணுகுமுறையுடனான, முறைமையாக்கப்பட்ட பெறுமானமுடைய அளவீட்டு ஆய்வின்பால் அமைந்த நுட்பங்களைக் கொண்டு உண்மையை சரிபார்க்கக் கூடிய ஓர் ஒழுங்கு முறை எனலாம்.

உண்மையில் நடத்தை வாதமானது அரசியல் விஞ்ஞானத்தில் ஒரு முறையியல் பண்பினையும், கோட்பாட்டு உருவாக்கத்தினையும் உட்புகுத்தியது. இங்கு அரசியல் ஆய்வுக்குத் தேவையான ஓர் முறையியலை கொண்டு வருவதில் நடத்தைவாதத்தின் பங்கு குறிப்பிடத்தக்கது. அது போன்று கோட்பாட்டு உருவாக்கத்தில் பல்துறை கற்கைகள் கருத்தில் கொள்ளப்படுவதன் விளைவாக புதிய கற்கைகள் அரசியலில் உட்புக நேரிட்டது (உதாரணமாக தலைமைத்துவ கற்கைநெறி) சிறப்புடையது எனலாம்.

**பின்நடத்தைவாதம்**

1940 இல் இருந்து 1960 வரைக்குமான இரண்டு தசாப்தங்கள் பிரபலம் பெற்றிருந்த நடத்தைவாத அணுகுமுறையானது பின்னர் பின்நடத்தைவாதமாக பரிணமித்தது. இருபது வருட கால நடத்தைவாத ஆய்வானது அதனுடைய எல்லைப்படுத்தப்பட்ட தன்மையினையும் குறைபாடுகளையும் உணர்ந்து கொண்டது. ஒரு விஞ்ஞானத்துவ அரசியல் கோட்பாட்டைக் கட்டமைப்பது நோக்கிய அதன் உண்மையான வளர்ச்சியின் தோல்வியானது அவர்களது நடத்தைவாத ஆராய்ச்சியின் மீது மாற்றத்தினை வற்புறுத்தியது. இதன்விளைவாக பல புதிய மாற்றங்களையும் பயிற்சிகளையும் ஏற்றுக்கொண்டு பின்நடத்தைவாதமாக பரிணமித்தது.

1969இல் David Eastonஅமெரிக்க அரசியல் விஞ்ஞான சங்கத்தின் தலைமையை பெற்றுக் கொண்ட போது அவர் பின்நடத்தைவாதம் என்ற சொற்பிரயோகத்தினை அறிமுகப்படுத்தனார். இதனால் புதிய ஆய்வு விடயங்கள் உட்புகத் தொடங்கின. உதாரணத்திற்கு வியட்நாம் யுத்தம், இன உறவு, வறுமை மற்றும் பெண்கள் உரிமை என்பவற்றை குறிப்பிடலாம். இதனால் அரசியல் சமூகவியல், மொழி நுட்பங்கள் இணைந்த தொடர்பாடல் என்பன அரசியல் விஞ்ஞானத்தின் பகுதிகளாக மாறின. பின்னர் 1970 ஆகும் போது பின்வரும் மூன்று விடயங்கள் அரசியல் விஞ்ஞானத்தில் தோற்றம் பெற்றன.

1. அரசியல் விஞ்ஞானத்தில் புதிய ஆய்வுத்துறை உட்புகுந்தது.

2. புதிய அரசுகளின் தோற்றமும், சனத்தொகை அதிகரிப்பும் புதிய துறைகளை ஏற்றுக்கொள்ளும் தன்மையை ஏற்படுத்தியது.

3. கற்கைத்துறையின் பெறுமானம் சார்ந்தவை திறந்த நிலைக்கு ஆக்கப்பட்டது.

பின்நடத்தைவாதப் புரட்சியானது தூய விஞ்ஞானத்தின் முறையியலை அடிப்படையாகக் கொண்டு மீள் எழுச்சி பெற்றது எனலாம். அந்தவகையில் பின்நடத்தைவாதத்தின் புதிய போக்கினை ஏழு விடயங்களைக் கொண்டு Easton விளக்கினார்.

1. அரசியல் பற்றிய அனைத்து யதார்த்தங்களினதும் ஆய்வின் தேவை.

2. சமூக மாற்றம் பற்றிய ஆய்வின் தேவை.

3. முறைகள், நுட்பங்கள் பற்றிய அதி கருத்தூன்றிப்பை ஒரு முடிவுக்கு கொண்டு வருவதன் தேவையும், அரசியலின் உண்மைப் பொருள் பற்றிய ஆய்வின் தேவையும்.

4. உண்மைகளுக்கு ஊடாக அமையும் பெறுமானங்கள் பற்றிய ஆய்வை அனுமதிப்பதற்கான தேவை.

5. அரசியல் பற்றிய அறிவைப் பயன்படுத்துவதன் மூலம் சமூக அபிவிருத்திக்கு உதவுவதன் தேவை.

6. அரசியல் விஞ்ஞானிகளின் மூலம் அரசியல் அறிவை செயற்பாட்டிற்கு கொண்டு வருவதன் தேவை.

7. சமூகத்தின் பெறுமானங்களை கட்டிக் காப்பதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் உதவுதன் மூலம் சமூகத்திற்கு சேவை செய்வதன் தேவை.

பின்நடத்தைவாதிகள் பொருத்தப்பாடு (Relevance), செயற்பாடு (Action) என்ற இரண்டையும் வழிகாட்டும் இரு நோக்குகளாக பரிந்துரை செய்வதுடன் அரசியலின் பெறுமானம்சார் ஆய்வின் தேவையினையும் ஏற்றுக் கொள்கின்றனர். இதில் பொருத்தப்பாடு என்பது அரசியல் பற்றிய அறிவற்ற யதார்த்தங்கள் உள்ளடங்கலான அனைத்து யதார்த்தங்களையும் பற்றிய ஆய்வைக் கருதுகிறது. அரசியல் விஞ்ஞானமானது சமூக யதார்த்தங்கள், சமூக மாற்றம் பற்றிய ஆய்வுகளுக்கு அடிப்படையான முக்கியத்துவத்தினை வழங்க வேண்டும். ஆனால் இவ்வணுகுமுறையும் முயற்சியும் பழைமைவாதம் பேணுதலுமல்ல

இயக்கமற்றதுமல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

செயற்பாடு என்பது அரசியல் செயற்பாடுகளில் செயற்படுவதற்குரிய அரசியல் விஞ்ஞானிகளின் பொறுப்பினைக் கருதுகிறது. இது பெறுமதிமிக்க மாற்றங்களை பின்பற்றுவதன் மூலம் அரசியல் பற்றிய அறிவையும் புரிதலையும் பயன்படுத்தி சமூகத்திற்கு உதவி செய்வதாக உள்ளது. மனிதனது தேவைக்கமைய ஓர் தொழில்சார் ஆய்வுமுறையாக உள்ள ஒரு புதிய வடிவத்தினை Easton தனது கருத்துக்களின் மூலம் வலுப்படுத்தினார் எனலாம். உண்மையில் பின்நடத்தைவாத புரட்சியானது அரசியல் விஞ்ஞானத்திலும் பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி இருப்பதனை நாம் காணலாம். அந்த வகையில் அது அரசியல் கோட்பாடுகளில் பரிசோதனை, இலகுதன்மை போன்றவற்றை உட்புகுத்தி மாற்றத்தினைச் செய்தது. இது அரசாங்கத்தை ஓர் கட்டமைப்பு சார்ந்த ஒன்றாக சிந்திக்கத் தூண்டியது. அது தனிப்பட்ட மனிதனின் உரிமை, கடமை என்பவற்றினூடாக நல்ல சமூக வாழ்க்கையை தேடும் ஒரு பணியை செய்தது எனலாம். இவை முறையான தரவுகள், நுட்பங்கள், மதிப்பீடுகள் என்பவற்றை கொண்ட ஆய்வாக அமையும் அதேநேரம் அதற்கான தீர்வினைத் தேடும் பணியினையும் தூண்டியது.

பின்நடத்தைவாதம் அரசியலை மேலும் விஞ்ஞானமாக்கும் பணியைச் செய்தது எனலாம். அது விஞ்ஞானத்தின் அடிப்படைகளை உள்வாங்கியதுடன் அதனை பிரயோகிப்பதனையும் சாத்தியமாக்கியது. குறிப்பாக சமூகத்தில் காணப்படுகின்ற பெறுமானம் சார் விடயங்களை உண்மையாக்கியதுடன் சமூக பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வினை வழங்கச் செய்தது.

அதன் அடுத்த பணியாக அரசியலை ஒரு கொள்கை விஞ்ஞானமாக (policyscience) மாற்றியதைக் குறிப்பிடலாம். குறிப்பாக தீர்மானம் எடுக்கும் செயற்பாடு பற்றிய ஆய்வினை அரசியலில் உட்புகுத்தியது. இது குறித்த பெறுமானம், இலக்குகளை யதார்த்தபூர்வமாக்க எத்தனித்தது எனலாம்.

நடத்தை வாதத்திற்கும், பின்நடத்தை வாதத்திற்குமான தொடர்பினை ஆராயவரும் போது பின்நடத்தை வாதத்தை நடத்தை வாதத்தின் ஒரு தொடர்ச்சியாகக் கொள்ள முடியும். உண்மையில் நடத்தைவாதம் அரசியலை ஒரு விஞ்ஞானமாக மாற்ற எடுத்துக் கொண்ட முயற்சிக்கு பின்நடத்தைவாதம் ஒரு யதார்த்தபூர்வ வடிவம் கொடுக்கும் பணியைச் செய்ததுடன் நடத்தைவாதம் விட்ட தவறுகளை சரி செய்வதாகவும் அமைந்தது. உதாரணமாக நடத்தைவாதிகளால் சமூகத்தின் பெறுமானம் சார்ந்தவைகள் மறுக்கப்பட்ட வேளையில் அவற்றை யதார்த்தமாக நோக்கியதுடன், அரசாங்கத்தினை ஒரு கட்டமைப்புசார் தொழில்பாட்டு ரீதியிலானதாக நோக்குவதுடன், அரசியலை ஒரு கொள்கை விஞ்ஞானமாக மாற்றியது எனலாம்.

**விமர்சனம்**

19ஆம் நூற்றாண்டிற்கு பிற்பாடு நடத்தை வாதிகளின் தோற்றத்தினால் அரசியல் கற்கைகளில் எற்பட்ட மாற்றமும் விரிவாக்கமும் குறிப்பிடத்தக்கது ஆயினும் அரசியலில் உள்ளவைகளை நியாயிப்பதற்கு ஆய்வு செய்வதற்கு அது போதுமானதோ முழுமையானதோ அல்ல. அது அரசியல் பற்றிய பாரம்பரிய அணுகுமுறைக்கு மாற்றமானதொரு வழியில் ஒரு முறையியல் அணுகுமுறையை அரசியல் பாடப்பரப்பில் ஏற்படுத்தியிருக்கின்றது. ஆனால் அரசியலில் உள்ள சில அடிப்படையான விடயங்களை அணுகுவதற்கான பாரம்பரிய முறைகளையும் அரசியல் கற்கைகளுக்கு என்று தனித்துவமாயுள்ள விடயங்களையும், எண்ணக்கருக்களையும் இந்நடத்தைவாதிகள் கவனத்திற் கொள்ளத் தவறிவிட்டனர்.

பின்நடத்தைவாதிகள் பெறுமானம்சார் விடயங்களை கவனத்தில் கொண்டாலும் கூட அவர்களும் அரசியலில் உள்ளவைகளை விஞ்ஞான மயப்படுத்துவதிலே கூடிய கவனத்தைச் செலுத்தினர். மனித நடத்தைகளை மட்டும் கருத்திற் கொண்டு அரசியலிலுள்ள அனைத்தையும் ஆய்ந்து அறிந்திட முடியாது. உதாரணமாக அதிகாரம் பற்றிய மரபுரீதியான அணுகுமுறை அரசியல் நிறுவனத்தை அடிப்படையாகக் கொண்டே பார்க்கப்பட்டுள்ளது. ஹொப்ஸ் அதிகாரம் சமூக ஒப்பந்தத்தின் மூலம் அரசிடம் ஒப்படைக்கப்பட்ட ஒன்று என வாதிடுகிறார். அதனடிப்படையிலேயே அவர் மன்னராட்சி முறைமையினை நியாயப்படுத்தவும் முனைகின்றார்.

இந்தப் பார்வை இன்றைய நாடுகளின் அரசியல் முறைமையினை ஆய்வு செய்யப் பொருத்தமற்றது எனக் கருத முடியாது. ஏனெனில் சமகாலத்தில் காணப்படுகின்ற முழுமுதல் முடியாட்சியுடன்(Absolute monarchy) மக்கள் ஒன்றித்து வாழ்வதனை புரிந்து கொள்வதற்கு மரபுரீதியான

ஹொப்சினுடைய அணுகுமுறை இன்றியமையாததாக உள்ளது.

பகுத்தறிவு முறை, மெய்யியல் முறை, இயக்கவியல் முறை போன்ற பாரம்பரிய முறைகளினால் அரசியல் பாடப் பரப்பில் அதிக ஆக்கபூர்வமான விடயங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் அவை அரசியலில் பயன்பட்டு வருகின்றது. பிளேட்டோவின் Philosopher King என்ற விடயம் Edmund Burke போன்றோரை கற்றறிவாளர் ஜனநாயகம் பற்றி சிந்திக்கத் தூண்டியுள்ளது.

முறைமை சரியாக இருந்தால் முடிவும் சரியாக இருக்கும் என்ற கோசத்தின் வழி, மனித நடத்தைக்கூடான தேடலின் முடிவு சிலவேளை நடைமுறையில் பொருந்துவதாக இல்லை. உதாரணமாக வாக்களிப்பு பற்றிய ஆய்வின்போது இரு ஆய்வாளர்கள் ஒரேவகையான முறையியலைப் பயன்படுத்தி ஒரே குடித்தொகை மீது ஆய்வு செய்கின்றபோது இரு வேறுபட்ட முடிவுகள் கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. இந்நிலைமை முறையியல் மீது கேள்வியை ஏற்படுத்துகிறது.

பாரம்பரிய முறைகளால் அரசியலில் ஏற்பட்ட வளர்ச்சி என்பது குறைத்து மதிப்பிட முடியாத அளவு தாக்கம்மிக்கவை. பிளேட்டோ முதல் மார்க்ஸ் வரையுள்ள அறிஞர்களின் சிந்தனைகள் இதற்கு உதாரணமாகும். பாரம்பாரிய முறைகளிலுள்ள சில தவறுகளை, பார்க்கபபடாத பகுதிகளை நடத்தைவாதம் பார்த்திருப்பினும் பாரம்பரிய முறையியலை பின்தள்ளி எதிர்கால கற்கையைக் கொண்டு செல்லமுடியும் என்ற நடத்தை வாதிகளின் எண்ணப்பாடு தவறானதாகும்.

இதைப்போல, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி என்பன பிரயோகிக்கின்ற நடைமுறைகளின் மீது அளவு கடந்த நம்பிக்கை கொள்வது புத்திசாலித்தனமாக இருக்க முடியாது. விஞ்ஞான அறிவு என்பது கூட கட்டமைக்கப்படுகின்ற கருத்துருவாக்கத்தின் விளைவு (Jean Baudrillard, 1988: 130, 133) என்பதும் இங்கு மனம் கொள்ளத்தக்கது.

**முடிவுரை**

அரசியல் ஆய்வில் நடத்தைவாதமானது சமகாலப்பகுதியில் தோன்றியதாயினும் அது அரசியல் ஆய்வுப் பரப்பில் விஞ்ஞானரீதியான அணுகுமுறையை தோற்றுவித்தது. எனினும் இது ஒரு போதுமான உள்ளடக்கத்தை கொண்டிருக்கவில்லை என பின்நடத்தைவாதிகள் கருதியமையால் அதில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தார்கள். இவ்வணுகுமுறையானது சமகால பிரச்சினைகளை அணுகுவதற்கு ஏதுவான ஒன்றாக அமைந்ததனால் பல புதிய கற்கைகள் தோற்றம் பெற்றன. எனினும் அரசியல் பரப்பினை பூரணமாக ஆய்வு செய்வதற்கு இவ்வணுகுமுறையின் கொள்ளளவு இடமளிக்கவில்லை. ஏனெனில் இது இயற்கை விஞ்ஞானத்தின் நுட்பங்களைக் கொண்டு மனித நடத்தையினூடாக அரசியலில் உள்ளவைகளை விளக்க முடியும் என்று நம்பிக்கை கொண்டிருந்தமையும், மரபுரீதியான அணுகுமுறையை புறந்தள்ளியமையும் இது முழுமையான நிலைபேற்றினை அரசியலில் அடைவதற்கு தவறியது.

விஞ்ஞானம் மீதான அபரிமிதமான பிரபல்யம் அனைத்துத் துறைகளையும் நுண்ணாதிக்கம் செய்து வருகிறது. அந்தவகையில் அரசியல் மீதான விஞ்ஞான ஆதிக்கத்தின் வடிவம் நடத்தைவாதம் எனக் கருத முடியும். நடத்தைவாதம் அரசியல் ஆய்வுக்கான தனித்துவமானதொரு வழிமுறையோ அல்லது அரசியல் விடயங்களோடு ஒட்டிப்பிறந்ததோ அல்ல என்பது இங்கு கவனத்திற் கொள்ள வேண்டிய விடயமாகும்.

**References:**


1. Baudrillard, J., *Jean Baudrillard: Selected Writings,* Stanford University Press, 1988.
2. Farr, James, and Raymond Seidelman, eds. *Discipline and History: Political Science in the United States.* Ann Arbor: University of Michigan Press, 1993.
3. Farr, James, John S. Dryzek, and Stephen T. Leonard.*Political Science in History: Research Programs and Political Traditions.*
4. Graham, George J., Jr., and George W. Carey.*The Post-Behavioral Era: Perspectives on Political Science.* New York: David Mckay, 1972.
5. Kaplan, Abraham. *The Conduct of Inquiry: Methodology for Behavioral Science. San Francisco: Chandler, 1964.*
6. Mclclland J.S, *History of political Thought, Routledge, London. 1996.*
7. Ray S.N, Modern Comparative Political Analysis, Deep & Deep Publication, New Delhi.
8. Somit, Albert, and Joseph Tanenhaus.*The Development of American Political Science: From Burgess to Behavioralism.* Boston: Allyn and Bacon, 1967.